வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 1607 /ஆ1 /2022, நாள் : 18.05.2022

பொருள்: தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணி – 01.01.2022–ல் உள்ளவாறு அரசு / நகராட்சி / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் நியமனம் – ஊட்டுப் பதவிகளிலிருந்து பதவி உயர்விற்கான உத்தேச கூடுதல் தேர்ந்தோர் பட்டியல் தயார் செய்யக் கருத்துருக்கள் அனுப்பக் கோருதல் – சார்பாக.

பார்வை : சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநர்(மேல்நிலைக்கல்வி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.42857/டபிள்யு.1/இ1/2021, நாள். 17.05.2022.

#######

பார்வையில் காணும் செயல்முறைக் கடிதத்திற்கிணங்க 01.01.2022–ன் நிலவரப்படியான அரசு / நகராட்சி / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வு வழங்கப்பட்டது. 31.05.2022–ல் ஏற்படும் காலிப்பணியிடங்களை நிரப்பிடும் பொருட்டு, கூடுதல் தேர்ந்தோர் பட்டியல் தயாரிக்க 2015–2016–ஆம் ஆண்டு பணிவரன்முறை செய்யப்பட்ட அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களில் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வு பெற்றவர்களை தவிர மீதமுள்ள தகுதிவாய்ந்த அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களின் விவரங்கள் மற்றும் 01.01.2018–ன் நிலவரப்படி அரசு உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெற்றவர்களில் பணிவரன்முறை எண்.13628 வரையுள்ள அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களின் விவரங்களை பார்வைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, உரிய படிவத்தின்படி மட்டும் பூர்த்தி செய்து 20.05.2022 அன்று மாலை 5 மணிக்குள் இவ்வலுவலகத்தில் நேரில் சமர்ப்பிக்குமாறு சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலகத்தின் பிரிவு உதவியாளர் மற்றும் சார்ந்த அனைத்து உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

(த.பி.பா.)

காலதாமதமாக அளிக்கப்படும் கருத்துருக்களுக்கு சார்ந்த பள்ளியின் தலைமை ஆசிரியர்களே முழுப்பொறுப்பேற்க நேரிடும் எனவும் திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்விற்கு Tamil Nadu Government gazette Part III section1(b) date: 30.01.2020-ல் அரசாணை நிலை எண்.14 பள்ளிக் கல்வி (பக2(1), நாள். 30.01.2020-ல் தெரிவித்துள்ளவாறு பார்வைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துறைத்தேர்வுகள் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

எனவே இணைப்பில் காணும் கடிதத்தின்படியும், உரிய படிவத்தின்படி மட்டும் பூர்த்தி செய்து மூன்று நகல்களில் அளிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு-
(பார்வைக் கடித நகல் 6 பக்கம்)
(படிவங்கள் உட்பட)

முதன்மைக் கல்வி அலுவலருக்காக,
வேலூர்.

பெறுநர் :

1. மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர்.
   (தகவலுக்காகவும், தொடர் நடவடிக்கைக்காகவும்)

2. சார்ந்த உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வே.மா.

நகல்.

தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநர்,(மே.நி.க.)
சென்னை-6, அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

//ப.த.//